மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கால்வாய் பழுதுபார்க்க வேண்டிய வேலையை அரசு நிச்சயம் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Manufacture of Television sets.

*72 Q.—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have addressed the Centre during 1972 for the issue of a "Letter of Intent" for the setting up of a factory for the manufacture of Television sets and components in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்:

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கணபதி: டெலிவிஷன் செட்களை உற்பத்தி செய்கின்ற அளவுக்கு எந்தத் திட்டமும் இல்லை என்றாலும், டெலிவிஷன் வசதியை சென்னை நகரத்தில் செய்து தருவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய மாநில அரசைப் பற்றிக் கேள்வி கேட்டதால், இல்லை என்று சொன்னேன். கூட்டுத் துறையில், ஜாயிண்டு செக்டாரில் 10,000 டெலிவிஷன் செட்கள் செய்வதற்கு அனுமதி கிடைத்திருக்கிறது. டெலிவிஷன் எங்கே வைப்பது என்பதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குக் கேள்வி போடவேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, கூட்டுத் துறையிலே எந்த நிறுவனம் முன்வந்திருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசு வாரியமும், விட்கோ, திரு. ஒபுலு ரெட்டி என்பவரும்.

திரு எம். தேவராசன்: டெல்லியிலெல்லாம் டெலிவிஷன் வந்தபிறகு தமிழகத்திலும் விரைவில் அதைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1972 டிசம்பர் 7]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே இதைப்பற்றி நம்முடைய மாநில அரசு மத்திய சர்க்காரை வற்புறுத்தி வருவது அனைவரும் அறிந்ததே.

திரு. ஏ. எம். இராஜா : டெலிவிஷன் செட் செய்வதற்குக் கூட்டுத் துறையிலே அரசு முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த டெலிவிஷன் செட்களுக்குத் தேவையான உபகரணங்களைச் செய்வதற்கு ஆன்ஸிலியரி இண்டஸ்டிரீஸ் சம்பந்தமாக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா, தனிப்பட்டவர்கள் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறு தொழில்கள் என்ற முறையில் இதைச் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்கள் கிட்டதட்ட சுமார் 7 பேர்களுக்கு மேல். இதைப்பற்றி நாம் மத்திய அரசுக்கு சிபார்சு செய்திருக்கிறோம்.

திரு. சொ. காவேரிமணியம் : கூட்டுத்துறையில் ஏற்படும் தொழிற்சாலை பிற்பட்ட பகுதிகளில் அமைய ஏற்பாடு செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பிற்பட்ட பகுதிகளில் தொழில்களை ஆரம்பிக்கின்ற பலமுயற்சிகள் ஏற்கனவே தொழில் துறையிலே எடுக்கப்பட்டு வருகிறது.

Price for molasses.

*73 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state the basis on which the price for molasses is fixed?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1961-ஆம் ஆண்டு மொலாஸிஸ் கட்டுப்பாட்டு உத்திரவின் கீழ் கரும்புக் கசண்டின் (மொலாஸிஸ்) விலையை மத்திய அரசு நிர்ணயிக்கிறது.

பாலங்கள்.

*74 வினு.— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி ஆற்றின் குறுக்கே எலமனூருக்கும் வாய்த்தலைக்கும் இடையே சிறிய பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?